**Editor's Note**

Please address all communication for the English pages to **The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 16th & 23rd OCTOBER, 1981 No. 41 & 42

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

***Subscription***

Inland: Rs. 35/- per year. Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## Gift of Film Projector to Jaffna YMCA

The First Secretary (Development) of the Canadian High Commission in Sri Lanka, Mr. Y. C. Pan, visited the Jaffna YMCA on 24th Sept. '81, and formally presented a 16 m. m. Film Projector as a gift to the YMCA. He was accompanied by Mrs. Pan. The President of the Jaffna YMCA accepted the Projector on behalf of the YMCA gratefully thanking Mr. Pan for the valuable gift.

## Executive Committee Appointments and Assignments

At its meeting held this month the Executive Committee of the JDCSI appointed *Mr. S. Ratnavel* as the Manager of the three Children's Homes run by the Diocese viz. Arulmanai, Manipay; Harriet Winslow Home, Pandateruppu and Levi Spaulding Home, Vaddukoddai.

The ExCo. decided to propose to the Jaffna Christian Union the name of the *Rev. S. Manopavan* as Chaplain to the non-R. C. Christians of Teachers' College, Palaly.

It appointed *Mr. Jeyarajan Annappah* of the staff of Jaffna College as Warden of Levi Spaulding Home with effect from January 1982.

The *Rev. J. C. Mather* is to leave Arulmanai and be Worker-in-Charge of Araly Church from January 1982 when *Rev. V. N. Tharmakulasingam* goes to Theological Seminary Madurai on one year's study Leave.

## Ariam Hudson Paramasamy Memorial Building Nearing Completion

The new hostel block being built in Uduvil Girls' College in memory of the former Principal Miss Ariam Hudson Paramasamy at a cost of over one million rupees is nearing completion. The dedication ceremory is expected to take place next month. The Old Girls Association of the College raised some money for the project and the UCBWM gave a substantial grant. Certain friends had contributed the cost of sections of the building in memory of their loved ones. Teachers and pupils of the school too made special efforts to raise funds for the building. The new hostel for girls and resident teacheis will serve a much felt need of this noble institution reputed for being one of the oldest girls' boarding schools in this part of the world. It will also be a fitting memorial to the illustrious first national principal of the school.

## Press Censorship

Under the existing State of Emergency, Press Censorship has been brought into operation from 21-8-81. The Competent authorities are the Secretary to the Minister of State and the Director of Information.

## Home for the Handicapped

The Jaffna Diocese of the CSI is making plans to set up in this International Year of Disabled Persons, a Home for Physically Handicapped Children in Inuvil. The Rev. A. Jeyakumaran the mininister in charge of this project went to Trivandram this month to observe and study the working of the Home for Handicapped (Polio) Children, Trivandram which has 90 children and a school of its own. He had disscussions with Dr. H. Jones the Convener of the Home and the Rt. Rev. I. Jesudason the CSI Bishop in Trivandram. Rev Jeyakumaran will be meeting Dr. Jones again later this month when he brings nine children and three of the staff of the Home in Trivandram on a sight-seeing tour of Sri Lanka.

## Christian Home Festival

Under the auspices of the Women's Fellowship of the J.D., C.S.I., Christian Home Festival was celebrated on the afternoon of Saturday the 10th October 1981 in the Manipay Church with a worship service and fellowship tea. The guest speakers Mrs. R. Parmer, retired Chief Education Officer and the Rev. H. R. S. Jeyachandran, Chairman, North and East Synod of the Methodist Church in Sri Lanka spoke at the service on the theme " Honour thy father and thy mother" Mrs. Sam Thampoe, Convener of the Women's Fellowship led the service. The Manipay Church choir was in attendance.

The week beginning 4th October 1981 was observed in the Diocese as Christian Home Week and Church Services were conducted by the respective Church Women's Fellowships in many Churches on Christian Home Sunday 4th October or the following Sunday.

## Sinnakkadai to be Rebuilt

The Jaffna Municipal Council is making plans to put up a new building at a cost of about twenty-five lakhs rupees in place of the present Small Bazaar, near Main Street, Jaffna. The Council has submitted the building plan to the Urban Development Authority for approval. When the building programme begins in January 1982, the market will temporarily be run in the Customs premises on Bankshall Street, adjoining the present site.

## Church Herald's Focus on "How Great Thou Art!"

The Rev. Dr. Howard C. Hageman the President of New Brunswick Theological Seminary, New Jersey, USA has written an article to a recent issue of the *Church Herald* the official magazine of the Reformed Church in America entitled " How Great Thou Art! ". The hymn first came to Sri Lanka after the Triennial Conference of the SCMs of India, Pakistan and Ceylon held in Guntur S. India in December 1957, where the Pakistani delegation had taught the hymn to the whole Conference. Dr. Hageman in a fascinating analysis brings out a reason for this hymn becomig so popular so fast among evangelicals. He suggests that this hymn is one of the few " in the evangelical collection that fulfills one of the basic requirements of a hymn: it is addressed in praise to God ". Most of the other favourite evangelical songs are testimonies set to music. They are addressed to each other for inspiration and encouragement. " How great thou art! " is sung about and *to* a good and gracious Father. That is what a hymn is.

## NCC Appoints New Education Secretary

The National Christian Council of Sri Lanka has appointed Mrs. Chitra Fernando to succeed Mr. Kenneth M. de Lanarolle as the Secretary for Education. Her office is installed at St. Luke's Vicarage, Borella. She is presently making a survey of all the Sunday Schools run by the member churches of the NCC with a view to conducting regional training courses and seminars for Sunday School teachers.

## Seminar on White-paper

The National Christian Council will conduct a full day seminar on the White-paper on Education on the 7th of November 1981. Principals of Christian Schools, Chaplains and some members of the clergy have been invited to participate at this seminar. Certain key officers of the Ministry of Education are expected to explain to the participants the proposals and salient points of the White-paper.

## Special Course in Christian Civilization

University of Jaffna has an Honours Course in Christian Civilization from the beginning of this academic year. students who obtain a good grade at the General Arts Qualifying examination will be allowed to pursue thir from year Special Course. Lectures on Christian Civilization are given by Rev. Fr. A. J. V. Chandrakanthan of St. Francis Seminary Colombugam and Mr. S. Jebanesan of Jaffna College, Vaddukoddai.

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Courses in (i) Welding
(ii) Advanced Welding
commence on 1st November, 1981.

Application forms are available at the Office.

*Director,*
Jaffna College Technical Institute,
Vaddukoddai.

**In Affectionate Memory**
of
**Lilly Pavalam Muttiah**
Born 19-2-1908
Called to Rest 25-10-1965

*Till memory fades and life departs*
*You will forever live in our hearts.*

Nunavil,
Chavakachcheri.

## Colombo Diocese Fails to Reach Consensus on Church Union

The Diocesan Council of the Church of Ceylon met for its Annual Sesions in the Diocesan Hall, Colombo from the 6th to the 8th of October 1981. Mr. Neville Samarakoon the Chief Justice of Sri Lanka addressing the Council as the Chief Guest at the inaugural session pleaded for Church Union and quoting from St. Paul expressed regret that some Christians had thought it fit to resort to the courts to resolve ecclesiastical problems which can be settled in more Christian ways among ourselves. After nearly a day long discussion on the Church Union Scheme, the Council decided to suspend decision on the matter. It is possible that the Bishop may summon an extra-ordinary session of the Council to resume the debate at a late date.

The Rev. Dulip Chickera conducted the daily Bible Studies which were much appreciated.

## Prisonor of Conscience Week

Amnesty International had a week-long drive from October 9th to the 16th to highlight the cases of more than 4,000 prisonors of conscience in the world. They claim that nearly half the 154 member states of the United Nations are holding people imprisoned for their beliefs and who have not used or advocated violence. In the Peoples's Republic of China, for instance 80 year old Gong Pinmei the former Roman Catholic Bishop of Shanghai has spent more than 26 years in prison on charges of counter-revolutionary activities and still is in prison.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

### தாரகை ஒளி

நண்பனை இழந்து விடாமல் இருப்பதற்கு நண்பனுக்கு நன்மை செய், எதிரியை உன் வசப்படுத்துவதற்கு எதிரிக்கு நன்மை செய்,

மலர் 141] 16, 23 — 10 — 1981 [இதழ் 42, 43

## கிறிஸ்தவ தமிழ் இலக்கிய மகாநாடு

இந்த வருட இறுதியிலும் அடுத்த வருடத்தின் ஆரம்பத்திலும் தென் இந்திய திருச்சபை மகாநாடு ஒன்று திருச்சியில் நடைபெற இருக்கின்றது இது கிறிஸ்தவ தமிழ் அன்பர்களுக்கு தேனமிர்தமாகப்படும் என்பதில் ஐயமில்லை.

தென் இந்திய திருச்சபயில் இலக்கிய வளர்ச்சிக்கு அதிக ஊக்கம் அளிக்கப்படவில்லையென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இவ்விடயத்தில் ரோமன் மார்க்கத்தார் சமீபத்தில் நாட்டிவரும் சாதனைகள் போற்றற்குரியன. வீரமாமுனிவர் விழா, தத்துவபோதகர் விழா, வேதநாயகர் நினைவு விழா போன்ற விழாக்களை எடுத்துத் தமது அரும் இலக்கிய கர்த்தாக்களையும், இலக்கியச் சிந்தனையாளர்களையும் கௌரவித்து வந்திருக்கின்றனர். சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அவர்கள் நடாத்திய ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா பாராட்டிற்குரியதாக அமைந்தது.

சீர்திருந்திய திருச்சபைகளில் ஆக்க இலக்கியங்கள் (Creative Literature) இல்லையென்பது பிறமதத்தவர்கள் கூறும் குற்றச்சாட்டாகும். ஆக்க இலக்கியம் இல்லாத மதப்பிரிவு சமுதாயத்தில் வேரூன்ற முடியாது என்பது சமூகவியல் அறிஞர் கருத்து. நம்முடைய ஆக்க இலக்கியம் வளரவில்லை. பதினெட்டாம் நூற்றூண்டிலே தோன்றிய வேதநாயகசாஸ்திரியாரும், பத்தொன்பதாம் நூற்றூண்டிலே தோன்றிய கிருஷ்ணபிள்ளையவர்களும் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்தினை வளர்த்து வந்தனர். வேதநாயகரின் "பெத்தலேங் குறவஞ்சியும்" கிருஷ்ணபிள்ளையின் "இரட்சண்ய யாத்திரிகமுமே" இன்று வரை நமக்குப் பற்றுக் கோடாக இருக்கின்றன.

அவர்களுக்கு பின்னர் தென்னிந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் சில பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் ஆக்க இலக்கியங்கள் சிலவற்றை உருவாக்க முயன்றுள்ளனர். இவர்களின் இலக்கிய முயற்சிகள் ஆராயப்பட வேண்டியுள்ளன இன்றைய கிறிஸ்தவ' தமிழ் இலக்கியங்கள் அரங்கேற்றப்படவேண்டியுள்ளன இலை மறை காயாகவுள்ள இலக்கிய கர்த்தாக்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டியவர்களாயிருக்கின்றனர். கிறிஸ்தவ தமிழ் உலகு சமீப காலத்தில் இலக்கியத்துறையில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்கமுடியாது சென்னை கிறிஸ்தவக் கல்லூரித் தமிழ்த்துறை, சி. எல். எஸ்., தமிழ்நாடு இறையியற்கல்லூரி என்பனவற்றின் பங்களிப்பு இவ்வகையிற் குறிப்பிடத்தக்கதாகும்.

டிசம்பரில் நடைபெறவிருக்கும் கிறிஸ்தவ தமிழ் இலக்கிய மகாநாடு சிறப்புற வாழ்த்துகின்றேம்.

### செய்திகள்

#### அமெரிக்க சபைகள் — வளர்ச்சியிற் குறைவு

அமெரிக்காவிலுள்ள புரட்டஸ்தாந்து சபைகளைப் பற்றிய 1979ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 1979ஆம் ஆண்டில் சபை வளர்ச்சி முந்திய ஆண்டிலிருந்து ·06 விதமாக மாத்திரம் காணப்பட்டது. இதன்படி சபை அங்கத்தவம் 133, 469, 690 ஆகக் கணக்கிடப்பட்டது. இதற்கு முந்திய இரண்டு ஆண்டுகளும் வருட வீதச் சபை வளர்ச்சி ·7 ஆகக் காணப்பட்டது. 1979இல் அதிகரித்த தொகை சுமார் 81 ஆயிரம் மாத்திரமே.

சபை உக்கிராணத்துவத்திலும் கூடப் போதியளவு அதிகரிப்புக் காணப்படவில்லை. பத்துப் பிரதான நாமதாரணப் பிரிவுகளில் காணப்பட்ட கொடை அளஅதிகரிப்பு 8:8 விதம்; எனினும் பணவீக்கத்தின் அதிகரிப்பு இதே காலத்தில் 11 3 விதமாக இருந்ததால் இந்தக் கொடை அதிகரிப்புப் பயன் தராமற் போனது எனக் கூறப்படுகிறது. அமெரிக்க சுதேச சபைச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 1981ஆம் ஆண்டுக்குரிய கைநூலில் இந்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, இந்தச் சபைகளின் கடைசியான புள்ளி விவரத் தொகுப்பு 1979 ஆண்டிற்குரியதே.

#### அமெரிக்க சபைகளில் ஒன்றிணைப்பு

அமெரிக்காவின் பாரம்பரியமாக இருந்துவரும் பிறிஸ்பித்திரிய (மூப்பராளுகை) சபை தனது இறையியற் கொள்கைகளின் கட்டுப்பாட்டைச் சற்றே தளர்த்தி விடுகிறதென்ற சாட்டில் 1973ஆம் ஆண்டிலே அச்சபைக்குள்ளிருந்த வைதிகப் பிரிவினர் அமெரிக்க பிறிஸ்பித்திரிய சபை என ஒரு புதிய சபையை ஆரம்பித்தனர். இந்தளவில் இது 86,885 அங்கத்தவர்களை மாத்திரம் கொண்ட ஒரு சிறிய வைதிகச் சபையாயிருக்கிறது.

தன்னுடன் இணைந்து கொள்ளும்படி இன்னும் சிறிய இரண்டு சபைகளுக்கு இது சென்ற ஆண்டின் இறுதியில் அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பைப் பெற்ற வைதீகப் பிறிஸ்பித்தீரிய சபையின் பொது மகாநாடு 91 எதிர் 41 வாக்குகளால் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. [illegible] பிறிஸ்பித்தீரிய சபை என்ற மறுசபை ஏற்கெனவே இன்னும் கூடிய விகித வாக்குகளால் இந்த அழைப்பை ஏற்றிருந்தது. எனவே இம்மூன்று சபைகளும், இன்னும் சில இறுதி ஆயத்தங்களுடன், விரைவில் ஒன்று சேருமெனக் காத்திருக்கப்படுகிறது.

இவை ஒன்று சேரும் பட்சத்தில் இந்த ஐக்கியத்தைச் சேர்ந்த வையாய் 850 தனிச் சபைகளும் 125,000 அங்கத்தவர்களும் இருப்பார்கள், ஒன்று சேரக் கருதும் இந்த மூன்று சபைகளும் Westminister Confession போன்ற விசுவாச ஆதாரத் திட்டங்களில் தமது கொள்கைகளை அமைத்துள்ளவை.

#### சாவகச்சேரியில் வலு இழந்தோருக்கு ஓர் இல்லம்

இம்மாதம் 9ஆம் திகதியன்று பிற்பகல் 5 மணியளவில் நடந்த ஒரு சிறு வைபவத்துடன் சாவகச்சேரி கண்டி வீதிக்கருகாமையில் வலு இழந்தோர் இல்லம் ஒன்று திறக்கப்பட்டது. இது சென்ற ஆண்டு இறுதியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் திட்டமிடப்பட்டு தற்போது இக் கழகத்தின் தலைவராயிருக்கும் உதவி அரசாங்க அதிபர் திரு. K. துரைராசாவுடைய ஆதரவுடனும், லயன்ஸ் சழகத்தின் முன்னைநாள் தலைவர் திரு. பொ. தேவேந்திரன் அவர்களுடைய அயராத ஒத்துழைப்புடனும் உருப்பெற்றது. 9ஆம் திகதியன்று நடந்த வைபவத்திற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. K. துரைராசா தலைமைதாங்கினர். பல பிரமுகர்கள் சமுகமளித்தனர். பிரதம விருந்தினராக திரு. M. K. சுப்பிரமணியம் சமாதான நீதவான் அவர்கள் சமுகமளித்திருந்தனர். இவ்வைபவத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தைத் திறந்துவைக்க, திரு. S. K. திரவியநாயகம் J. P. U. M. முன்னைநாள் நகர சபைத் தலைவர் அவர்களும், சாவகச்சேரித் திருச்சபைக் குருவானவர் வண. ஜே. ஜே. இரத்தினராசா அவர்களும் உரையாற்றினர். சாவகச்சேரி திருச்சபையினர் கடந்த ஆண்டில் இவ்வெத்தனத்துக்காக ரூபா 1000/- வழங்கியிருந்தனர். சாவகச்சேரியிலுள்ள டிஸ்திறிக் நீதவான் யோகேஸ்வரன் அவர்கள் மாதாந்தம் இந்த நோக்கத்துக்காக பணவுதவி கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. திரு. M. K. சுப்பிரமணியம் அவர்கள் இவ்வில்லத்துக்காக ரூபா 10,000/- வழங்கியிருப்பது மாத்திரமல்ல, தமது வியாபார நிறுவனத்தின் வருமானத்திலிருந்து தற்போதும், தனது மறைவின் பின்னும் ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கியிருப்பது மெச்சப்படக்கூடியது. வைபவத்தின் இறுதிக் கட்டமாக கைதடி நவீல்ட் பாடசாலைச் சிறுவர்கள் சிலர் வலு இழந்தோராக சமுகமளித்தோரை இன்னிசை ஊட்டி மகிழ்வித்தமை மிகப் பொருத்தமாயமைந்துள்ளது. மிகச் சிறந்த நோக்குடன் அமைக்கப்பட்ட இவ்வில்லத்தை இறைவன் தமதருளால் நிறைந்து ஆசிபுரிய வேண்டும்.

#### பிள்ளைகள் இல்லங்களுக்குப் புதிய முகாமையாளர்

யாழ். ஆதீனத்தினுல் ஆரம்பித்து நடப்பிக்கப்படும் சிறு பிள்ளைகள் இல்லங்கள் மூன்று. மானிப்பாயில் "அருள் மனை" யென்ற ஆண் பிள்ளைகள் இல்லம், வட்டுக்கோட்டையில் "லேவிஸ்போடிங் இல்லம்" ஆண் பிள்ளைகளுக்கு, பண்டத்தெருப்பில் "ஹரியெற் உவின்ஸ்லோ இல்லம்" பெண் பிள்ளைகளுக்கு. இவை மூன்றிலும் தற்போது சுமார் 130 பிள்ளைகள் இருக்கிறார்கள். மெமோறியல் வித்தியாசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, பண்டத்தெருப்பு பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் படிக்கிறார்கள். இந்த இல்லங்களில் இடம் தேடும் இன்னும் அநேக பிள்ளைகளைச் சேர்ப்பதற்காகக் கட்டட வேலைகள் துரிதமாய் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

இந்த மாதம் 15ஆம் திகதியிலிருந்து இந்த மூன்று இல்லங்களுக்கும் பொது முகாமையாளராக ஆசிரியர் திரு S. இரத்தினவேல் அவர்களை ஆதீனத்தின் நிர்வாகக் குழு நியமித்துள்ளது. இந்த மூன்று இடங்களிலுமுள்ள சபைக் குருமார் அந்தந்த இல்லத்தின் பொது மேற்பார்வையாளராய்க் கடமையாற்றுவார்கள்.

இவைகளை விட, நெடுந்தீவில் "பகல் வேலைப் பராமரிப்பு நிலையம்" ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும், இணுவிலில் அங்கக் குறைவுடைய பிள்ளைகளுக்கான இல்லம் ஒன்று வரும் மாதத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளதையும் வாசகர் அறிவர். நமது சமுதாய முன்னேற்றத்திற்கு இவை யாவும் உதவுமென்பதற் கையமில்லை.

— நிருபர்.

#### கிறிஸ்த இல்ல விழா

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தின் வருடாந்தக் கிறிஸ்த இல்ல விழா இம்மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமையன்று மானிப்பாய்த் திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது. பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பித்த விழாவில் ஆதீனத்தின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 200 அங்கத்தவர் சமுகமாயிருந்தனர்.

விழாவின் பிரதான அம்சமான வழிபாட்டு ஆராதனை ஆதீனம் பெண்கள் ஐக்கியத்தின் கூட்டுபவர் திருமதி சாம் தம்பு அவர்களினுல் நடத்தப்பட்டது. பண்டத்தெருப்புச் சபையைச் சேர்ந்த திருமதி W. S. தங்கராஜா, சங்கானைச் சபையைச் சேர்ந்த திருமதி K. கிருபைராஜா ஆகியோர் முறையே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு வேதப் பகுதிகளை வாசித்துதவினர். இதற்கெனத் தயாரிக்கப்பட்ட சிறப்புச் செபமாலை தலைவர் அவர்களினுல் நடத்தப்பட்டது. மானிப்பாய்ச் சபைப் பாடகர் சிறப்புப் பாடல்கள் பாடினர்.

இளைப்பாறிய கல்வி அதிகாரி திருமதி R. பார்மர் அவர்களும், வட இலங்கை மெதடிஸ்த சபைத் தலைவர் கனம் H. R. S. ஜெயச்சந்திரன் அவர்களும் "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்ற சிந்தனை வடயத்தை ஆதாரமாகக் கொண்டு சிறப்புரைகள் ஆற்றினர்கள். கடவுளுடைய அருளைப் பெறுவதில பிள்ளைகள் பெற்றுரைக் கனம்பண்ண வேண்டிய தவசியம் எனவும் கிறிஸ்துவின் வெளிச்சத்தைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது பெற்றேரின் கடமை யெனவும் திருமதி பார்மர் அவர்கள் விளக்கினர்கள், கனம் ஜெயசந்திரன் போதகர் அவர்கள் ஒரு கிறிஸ்த குடும்பத்தின் சிறப்பான குணதிசயங்களை விவரித்து ஒரு கிறிஸ்த குடும்பம் தன்னைச் சுற்றி வாழும் மக்களுக்குக் கிறிஸ்துவை எடுத்துக் காட்டும் ஒரு நற்செய்திப் படையினராய் இருக்க வேண்டும் எனக் கூறினர்கள்.

சிறு சவ்வக் காணிக்கை ஒப்படைத்தலும் ஆராதனையில் இடம் பெற்றது. திருமதி A. N. L. வறுஸ்பிள்ளை அவர்கள் செபுத்த நன்றியுரையைத் தொடர்ந்து மகாகனம் அத்தியட்சர் அவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆராதனை முடிவடைந்தது. சமுகமாயிருந்த அனைவருக்கும் ஆராதனையைத் தொடர்ந்து ஆதீனப் பெண்கள் ஐக்கியம் தேநீர் உபசாரனை நடத்தியது.

[உரைகளின் சாராம்சங்கள் வேறுகத் தரப்படும்.]

பாராட்டுரை

## திருமதி கிரேஸ் முத்தம்மா செல்வத்துரை

"வீழ் நாள் படா அமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ் நாள் வழியடைக்கும் கல்"



என்ற பொய்யா மொழிக்கு இலக்கியமாக இப்பூவுலகில் மனுக்குலத்தின் வழிகாட்டியாக எழுபத்திரண்டாண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் வண்ணமாக 18-09-81ல் கர்த்தருக்குள் அடங்கியவர் **திருமதி கிரேஸ் முத்தம்மா செல்வத்துரை** ஆசிரியை.

கடவுள் தான் இருக்க வேண்டிய இடங்களிலெல்லாம் தாயைப் படைத்தார் என்ற முதுமொழிக்கிணங்கச் சரவெட்டி கிழக்கு, தெருத்தலை என்ற இடத்தில் புகழ் பூத்த இராமுச்சட்டம்பியாருக்கும் வேத ஊழியை சின்னாச்சிப்பிள்ளைக்கும் ஒன்பதாவது பிள்ளையாகத் தோன்றினார். பெண்கள் பாடசாலைகளுக்குப் போய்க் கல்வி பயில தயங்கிய காலத்திலேயே கல்வி முக்கியத்துவத்தை தெரிந்து இவரை சிறு வயதிலேயே பெரிய பாடசாலைகளான பருத்தித்துறை பெண்கள் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயில வைத்தனர் அவர் பெற்றோர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று தனது 18வது வயதிலேயே ஆசிரியையாக மலர்ந்தனர் மகள் முத்தம்மாவும். ஆசிரியையாகக் கொக்குவில் C C பாடசாலை, கண்டி, கட்டுக்கலை முஸ்லிம் பாடசாலை, மட்டக்களப்பு, அனுராதபுரம் கன்னியாஸ்திரிகள் மடம், நெல்லியடி, கட்டைவேலி, ஆவரங்கால், வதரவத்தை மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளில் பணிபுரிந்தார். இவற்றில் கஷ்டமான பிரதேசமான வதரவத்தையில், பஸ் வசதியில்லாத, குடிதண்ணீரில்லாத கஷ்டமான குறைவுறும் சூழ்நிலையிலும் மூன்று வருடங்கள் பணியாற்றி அப்பிரதேசத்தில் கல்வியைச் சிரத்தையோடு கற்பித்து அஞ்ஞான இருளை நீக்கினார்.

ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலையில் ஓய்வு பெறும் காலம் வரை தலைமை ஆசிரியையாகக் கடமை புரிந்தார். இந்த நாட்களிலேயே அவர் திறமை பூரணமாக வெளிப்பட்டது. தங்கு மடம் என்ற நிலையை மாற்றி ஊக்கத்துடன் கல்வி கற்பித்து, அந்நாளில் நடந்த பொதுப் பரீட்சைகளில் மாணவர்களைத் தோற்றச்செய்து பாடசாலையை முதல் முதலாகப் பொதுப் பணிகளில் பங்கேற்க வைத்தார். தம் சொந்த முயற்சியால் இப்பாடசாலைகளில் படித்த மாணவ மாணவியருக்குப் பெரிய கல்லூரிகளில் இடம் எடுத்துக் கொடுத்தார். இன்று ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்ற மாணவர்கள் எத்தனையோ பேர் வைத்தியக் கலாநிதிகளாக, பொறியியலாளராக, விரிவுரையாளராக, பாடசாலை அதிபர்களாக, ஆசிரியர் ஆசிரியைகளாகப் பணியாற்றுவது இவரின் சிறந்த பணிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

தந்தை வழி தாய் வழி வந்த பண்போ அல்லது மரபுவழி ஏற்பட்ட பழக்கமோ கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இவரின் சொந்த உறவினர்களுக்கு மேல் கல்வி பயில ஊக்கமும் நிதி உதவியும் செய்தார்.

ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலையில் தையல் வகுப்புகளைத் தொடங்கினார். Brownies (சாரணப் படை சிறுமிகள்) படை ஒன்றையும் துவக்கி வடமாகாணத்தில் முதலாவது இடத்தை இந்த Brownies எடுக்கச் செய்தனர். புதுமைகளைப் புகுத்தியதால் புதக்கா என்றும் முத்தக்கா என்றும் டீச்சர் என்றும் செல்லமாக அழைக்கப் பட்டார். ஆனைப்பந்தியில் பெண்கள் தையல் வகுப்பொன்று தொடங்கி நடத்தினார்.

இந்த மாணவர்களைக் கொண்டே ஒரு ஓய்வு நாட் பாடசாலையையும் ஆரம்பித்து நடத்தினார்.

இவரின் நற்பண்புகள் இவர் பிள்ளைகளிடத்தும் மலரத் தொடங்கின. அவர்களும் உயர் நிலையை யடைந்து நல்வாழ்வு பெற உதவின பலராலும் பாராட்டுக்குரியவராக நன்னிலையடைந்தார். யாழ்/ ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலை அதிபராக 23 ஆண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றார். இவரின் மறைவு ஆயிரக்கணக்கான மக்களை உலுக்கியது. பெற்ற தாயை இழந்தோமெனக் கலங்கினர். அவர் ஆத்மா நிச்சயமாக கர்த்தர் சந்நிதியில் இன்புற்றிருக்குமென தேறுதலடைந்தனர்.

நாமும் அவர் காட்டிய வாழ்வை மேற்கொண்டு தன்னலம் நீக்கி பிறர் நலம் பேணி வாழ்வதே அவர்க்குச் செய்யக் கூடிய கைமாறு என நடந்து ஆறுதலடைவோம்.

— கிருபராசா செல்லையா.

---

## பிரமுகர் வருகை

சர்வலோக சேவைகளுக்கான ஐக்கிய சபைச் சங்கம் (U. C. B. W. M.) ஸ்தாபனத்தில் பணியாற்றுவோர் துறைச் செயலாளரான செல்வி கனம் எலீனோர் கலுஷா அவர்கள் இம்மாதம் 25ஆம் திகதி தொடக்கமாக நாலு நாட்கள் யாழ். ஆதீனத்திற்கு வருகை தந்திருந்தார்கள். இவர்கள் மேற்படி ஸ்தாபனத்தின் பசிபிக் பிராந்திய நாடுகளுக்கான பகுதிச் செயலாளராகவும் கடமையாற்றுகிறார்கள். இற்றைக்குச் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் குரு அபிடேகம் பெற்ற இவர்கள் இருபது ஆண்டுகள் சபை ஊழியத்திலும் பத்து வருடங்கள் ஒரு தனிச் சபையின் பொறுப்பிலும் ஊழியம் புரிந்தவர்கள்.

செல்வி கனம் கலுஷா அவர்கள் வியாழக்கிழமை 22ஆம் திகதி காலை ஆதீனத்தின் சபை ஊழியருக்கான ஒரு கூட்டத்திற் பேசினார்கள். யாழ்ப்பாணத்திற்கு வர முன் இரண்டு வாரங்கள் இந்தியாவிலும் தற்சமயம் இலங்கையிலும் தான் கண்ட சில நிலைபரங்களைப் பின்னணியாகக் கொண்டு, "நான் அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டாயிருக்கும்படியும் அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்ற நமது ஆண்டவர் கூற்றைச் சார்ந்ததாய், உலக மக்களுக்கு 1981ஆம் ஆண்டிலும் வருங்காலத்திலும் வாழ்க்கையின் பரிபூரணம் என்றால் என்ன என்பதைக் குறித்துப் பேசினார்கள்.

"இந்தியாவிற் காணப்படும் வறுமையில் ஓரளவை நான் கண்டேன். பரிபூரண வாழ்வு என்னவென்று கேட்டால் உலகவாழ்க்கைக்குரிய தேவைகளில் நிறைவைக் காண்பதேயெனப் பல அமெரிக்கர் கூறக்கூடும். ஆயினும் உலகின் வேறு பல பாகங்களில் இப்பேர்ப்பட்ட நிறைவைக் காண்பதரிது.

இன்னும் சிலர், தனியாள் ரீதியாக, மன்னிப்பைப் பெற்ற நிலையும் அதனால் உண்டாகும் விடுதலை மனப்பான்மையும் முழு ஆள் தத்துவத்தின் விருத்தியுமே பரிபூரணத்தைக் குறிக்கும் என்பார்கள். ஆயினும் வாழ்க்கையின் பரிபூரணம் தனியாளுடனும், அவன் மாத்திரம் சம்பந்தப்பட்டதாயும் இருந்துவிட முடியாது. மனிதன் சமுதாயத்திலே சீவிக்கிறான் — சமுதாயத்தோடு சம்பந்தப்பட்டவனாய்ச் சீவிக்கிறான். இதை அவர் ஒருபோதும் தவிர்த்துவிட முடியாது. கிறிஸ்தவம் இந்தச் சமுதாயத் தொடர்பிலே, கடவுளிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட அன்பைப் பிரதிபலிக்க வேண்டியதாயிருக்கிறது. இது அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஓர் உத்தரவாதம்.

நிற வேறுபாடு, சாதி வேறுபாடு என்ற முறையில் தமது அரசியல், சமுதாய விவகாரங்களை நடத்தி வரும் நாடுகளைப் பொறுத்ததாய்ப் பரிபூரண வாழ்க்கை என்றால் என்ன? பொருளாதார அடிப்படையில் வேறுபட்ட நாடுகளுக்கிடையிலேயும், ஒன்று பட்டினியிருக்க இன்னொன்று பெருஞ் செலவில் போராயுதங்களைப் பெருக்கிச் சேமித்துக் கொண்டுபோகும் சூழ்நிலையிலும் இதன் கருத்து என்ன? இதில் திருச்சபையின் பங்கு என்ன?

இரண்டு அடிப்படை நிலைகளைத் திருச்சபை மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேவகம். ஆண்டவர் தாம் சேவை கொள்ளவல்லாமல் சேவை செய்யவே வந்தவராகக் காட்டினார். திருச்சபை சேவை ஸ்தாபனமாக உலகத்துக்குள்ளே செல்ல வேண்டும், சென்று சகலரும் வாழ்வின் பரிபூரணத்தைக் காணக்கூடியதாகச் சேவையாற்ற வேண்டும். மற்றது, சபையின் ஒத்து வாழும் தன்மையைக் குறிக்கும். எவ்வித வேறுபாட்டுப் பேதமுமின்றிச் சகலருடனும், சகலர் மத்தியிலும் வாழவும் கிரியையாற்றவும் அது அழைக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் ஆதாரமாகத் திருச்சபையானது கடவுளே ராஜரீகம் பண்ணுகிறார் என்பதை மனதிற்கொண்டு தன்னைத்தானே அவரின் சேவையாளனாகக் கருதிக்கொள்ள வேண்டும்." இவ்வாறு செல்வி கனம் கலுஷா அவர்கள் கூறினார்கள்.

22ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு ஆதீனத்தின் எல்லாச் சபைகளிலுமுள்ள பெண்கள் ஐக்கியத்தினருக்கான ஒரு விசேட கூட்டம் உடுவில் தேவாலயத்தில் நடைபெற்றது. ஆதீனப் பெண்கள் ஐக்கியம் கூட்டுபவர் திருமதி சாம் தம்பு அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தினார்கள். செல்வி கனம் கலுஷா அவர்கள் உரையாற்றினார்கள். உடுவிற் சபைப் பாடகர் சிறப்புப் பாட்டுப் பாடினார்கள். மகா கனம் அத்தியட்சர் அவர்களின் ஆசீர்வாதத்துடன் கூட்டம் முடிவடைந்தது. கூட்டத்தைத் தொடர்ந்து சகலருக்கும் தேநீர் உபசாரனை நடத்தப்பட்டது.

[ இக் கூட்டத்தில் செல்வி கலுஷா அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்சம் வேறாகத் தரப்படும் ]

---

குட்டிக் கதை

## கிறிஸ்மஸ் வருகிறது

அக்டோபர் மாதம் முடிகிறது. ஜோர்ஜ் மாஸ்டர் கிணற்றடியில் பல் விளக்கிக் கொண்டிருக்கிறார். இன்னும் இரண்டு மாதம் போனால் பிள்ளைகளும் மருமக்களும் குழந்தைகளுடன் கிறிஸ்மஸ் கொண்டாட வந்துவிடுவார்கள், கிறிஸ்மஸ் காலத்தில் மக்களும் மருமக்களும் அவர் வீட்டில் ஒரு வாரம் கூடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இன்று ஜோர்ஜ் மாஸ்டர் ஒண்டிக்கட்டை. மனைவி பரமபதியடைந்து மூன்று வருடங்களாகிவிட்டன. பிள்ளைகள் திக்குத்திக்காகப் போய்விட்டனர். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் செல்வராணியைப் பெண் பார்க்க அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தவர். இன்று எத்தனையோ விஷயங்கள் நடந்து முடிந்து விட்டன. அவரோ வேறு இடம் போனது கிடையாது.

ஜோர்ஜ் மாஸ்டர் துலாவைப் பிடித்தவண்ணம் யோசிக்கின்றார், ஒவ்வொரு கிறிஸ்மசும் அவர் உள்ளத்தில் சினிமாக் காட்சி போல் தோன்றி மறைகின்றது. செல்வராணியை மோதிரம் மாற்றிக் கொண்ட காலத்தில் கிறிஸ்மஸ் — குதிரை வண்டிலில் நான் போய் இறங்க— அவா சிங்கப்பூர் சேலையையும் கட்டிக்கொண்டு தங்கைமாருடன் பதுங்கிய காட்சி, திருமணமான பின் முதலாவது கிறிஸ்மஸ் எத்தனை பரிசுகள்.

மூத்தவள் பிறந்த வருடம்! கிறிஸ்மசுக்கு அவளுக்கு நாங்கள் கொடுத்த நடப்பு, இப்ப எல்லாவற்றையும் மறந்து விட்டாள் கள்ளி! இந்த முறை வரட்டும் அவளின்ரை மகளுக்காவது எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும். அவளின்ர மேளுக்கு என்ன பெயர்? இந்தப் புதுநாணயப் பெயரொன்றும் எனக்கு ஞாபகம் வராது — டெலீசியாவோ? டெரிசியாவோ?

இவளின்ரை தமையன் சிங்கப்பூரால வந்த வருடம்! அப்பெல்லோ கிறிஸ்மஸ், அந்தாள் எத்தனை சாமான்களைத் தான் கொண்டு வந்தது. அண்டைக்கு வீட்டில கலியாண வீடெல்லோ அந்தச் சரீரத்தையும் மண்திண்டிட்டுதே!

மூத்தவளுக்கு கலியாணம் நடந்த வருடம் மேளும் மருமோனும் வீட்டில ஒரு மாதம் வந்து நிண்டினம். என்ன இருந்தாலும் மூத்த மருமோன் நல்ல பிள்ளைதான், அதுதான் இன்று வரை மாமர மாமா எண்டு என்னில நல்ல மரியாதை.

செல்வராணியை பயணம் அனுப்பிய வருடம்! அவா போனபிறகு மூண்டு வருஷம் சிவிப்பன என்று நான் நினைக்கவில்லை, எல்லாரும் என்னோடு வந்திரு உன்னோடு வந்திரு எண்டபடி.

அட்டடே மெயிலும் வந்திட்டுது போல கிடக்குது, இன்னும் இரண்டு மாதம் போனால் அவையைப்பார்த்து ஸ்ரேசனுக்கு ஓட வேண்டும்.

ஜோர்ஜ் மாஸ்டர் சிந்தனை கலைகிறது.

— "ஈழக்காந்தி"

## SEARCHING FOR PEACE

BY
GERRY O'REILLY ofm.

[By courtesy of the magazine BRIEF the following article is reproduced in two instalments to mark the beginning of the Year of St. Francis this month.]

There was once a woman who was expecting. She was overdue. She was well overdue. Her relations and friends were worried and anxious. The woman's husband was away, far away in a foreign land on business. He was anxinus too. He was afraid for his wife's sake.

One evening a knock came to the door. A total stranger entered the house and approached the woman: "Pica", he said (for Pica was her name), "Go to the stable and all will be well." With that he left.

"What strange advice," said the anxious woman. But Pica insisted on doing what the stranger had told her. She went to the stable and there in the cow's house, her little son was born.

She baptised him Giovanni Bernardone. On returning from his travels the father heard the good news. He was delighted to hold in his hands his infant son. what plans, what dreams, what wishes, he had for this his young boy. He was overjoyed. But he did not like, the name Giovanni. He changed the child's name to Francesco. Today that man is known by the name of Francesco, St Francis of Assisi.

Francis had black eyes, a round chuppy face and a warm personality. Often his father took him in his hands, played with him, joked with him, and like many a longed for child, spoilt him. Everyting he could give the boy, he gave: clothes, the best; money, as much as he desired. Francesco was his darling. Francis would help him in the shop: Francis would expand the business: Francis would be like his father! what dreams the father dreamed as the boy grew strong and handsome.

His father sent him to the local school. There Francis learned to read and write. But his father wanted no scholar son. He wanted a practical man, who would follow in his footsteps of money making. Francis, seemingly, fell into line with his father's thinking.

Francis grew up with the lads and lassies of Assisi. The youth of Assisi had a bad name, in those days: they overliked their drinks, their sex, themselves. Francis became their ringleader. However, he always had a generous heart and hand. Thomas of Celano who wrote Francis' life story shortly after his death, says that Francis, "Although extremely rich, was more interested in spending than in hoarding money." He liked music, dancing, singing and poetry. He liked going around with the boys and girls and was always ready for a crack! His father was by no means against Francis' conduct. Francis' way of life was a good advertisement for the success of the family business!

